# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

2017 ஏப்ரல் மாதம் 01 ஆம் திகதி

**ஓய்வூதியச் சுற்றறிக்கை இலக்கம் : 13**

பல்கலைக்கழக உபவேந்தர்கள்

வளாக அதிபதிகள்

நிறுவகப் பணிப்பாளர்கள்

**<u>பல்கலைக்கழக ஓய்வூதிய நியதியத்திற்கு பெயரை பரிந்துரை செய்தல்</u>**

பல்கலைக்கழக ஊழியர்களுக்கான ஓய்வூதிய முறை எனும் தலைப்பில் வெளியிடப்பட்ட 1999 ஜூன் 10 திகதிய 747 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கை மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

அதற்கமைய, திருமணமாகாத அல்லது 20 வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்யாமல் ஊழியர் ஒருவர் மரணிக்கும் சந்தர்ப்பத்தில் அவரது ஓய்வூதியக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ள பங்களிப்புத் தொகை மற்றும் அதற்கான வட்டி சட்ட ரீதியான உரிமையாளர்களுக்கு மீளச் செலுத்தப்படுவதுடன், இதற்காக இலங்கை சிவில் வழக்குகள் நடைமுறைச் சட்டக் கோவை பின்பற்றப்படுகின்றது.

ஓய்வூதிய நிதியத்தின் சேமிப்பை மீளப் பெற்றுக்கொள்ளும்போது மரணித்த அங்கத்தவர்களின் சட்ட ரீதியான உரிமையாளர்கள் முகங்கொடுக்கும் சிரமங்களைக் கவனத்திற் கொண்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு, பல்கலைக்கழக சேமலாப நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் பிரகாரம் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரங்கள் சட்டத்தின் 93 (2 அ) உறுப்புரையின் பிரகாரம் ஓய்வூதிய நிதியத்திற்காக பெயர்களைப் பரிந்துரை செய்துகொள்வதற்குத் தீர்மானித்துள்ளது.

எனவே, 2017 ஏப்ரல் மாதம் 01 ஆம் திகதியன்று சேவையில் ஈடுபட்டிருக்கும் சகல பங்களிப்பாளர்களும் கீழ் குறிப்பிடப்படும் வழிகாட்டலுக்கமைய தனது மரணத்தின் பின்னர் ஓய்வூதிய நிதியத்தின் தனக்குரிய சேமிப்புத் தொகையை செலுத்த வேண்டிய நபர் / நபர்களின் பெயர்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

1. 2017 ஏப்ரல் மாதம் 01 ஆம் திகதியன்று சேவையில் ஈடுபட்டிருக்கும் சகல அங்கத்தவர்களிடமிருந்தும் பெயர்களை பரிந்துரை செய்யும் படிவத்தைப் பெற்று, அதனை உரிய முறையில் பரிசோதித்து உறுதிப்படுத்தியதன் பின்னர் அவர்களது தனிப்பட்ட கோவையில் கோவைப்படுத்தல் வேண்டும்.
2. ஓய்வூதிய நிதியத்திற்கான உரிமையைப் பெற்றுக்கொள்ளும் புதிதாக ஆட்சேர்த்துக்கொள்ளப்படும் ஊழியர்களிடமிருந்து அவர்கள் நியமனக் கடிதத்தைப் பொறுப்பேற்கும் சந்தர்ப்பத்திலேயே பெயர்களைப் பரிந்துரை செய்யும் படிவத்தையும் பெற்றுக்கொள்ளுதல் கட்டாயமாகும். அதனை உரிய முறையில் பரிசோதித்து உறுதிப்படுத்தியதன் பின்னர் அவர்களது தனிப்பட்ட கோவையில் கோவைப்படுத்தல் வேண்டும்.
3. ஓய்வூதிய நிதியத்திற்காக பெயர்களைப் பரிந்துரை செய்யும் நடவடிக்கை, 20 வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்யாமல் ஒரு ஊழியர் மரணிக்கும் சந்தர்ப்பத்தில் அல்லது திருமணமாகாத ஆண் / பெண் ஊழியர் ஒருவர் மரணிக்கும் சந்தர்ப்பத்தில் அவர்களுடைய சட்ட ரீதியான உரிமையாளர்களுக்கு நிதியத்தில் அவர்களுக்குரிய சேமிப்புத் தொகையை செலுத்துவதற்கு மாத்திரமே செல்லுபடியாகும்.

4. பங்களிப்பாளர் மரணிக்கும்போது அவரது தனிப்பட்ட கோவையில் இடப்பட்டிருக்கும் பெயர்களைப் பரிந்துரை செய்யும் படிவத்தின் அசல் பிரதியை பதிவாளரின் சான்றுப்படுத்தப்பட்ட ஓய்வூதிய நிதியத்தின் மீளச் செலுத்தும் விண்ணப்பத்துடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

5. பரிந்துரை செய்யப்பட்டு செல்லுபடியான பெயர் தற்போது வலுப்பெறாவிட்டால் (செல்லுபடியாகாவிட்டால்) அல்லது பங்களிப்பாளரின் மரணம் நிகழும்போது பரிந்துரை செய்யப்பட்ட நபர் / நபர்கள் மரணித்திருந்தால் மரணித்த பங்களிப்பாளரின் சட்ட ரீதியான உரிமையாளர்களுக்குச் செலுத்தப்படும்.

6. சகல ஊழியர்களிடமிருந்தும் மேலே குறிப்பிடப்பட்ட பெயர்களைப் பரிந்துரை செய்யும் படிவத்தைப் பெற்றுக் கொண்டதாக பல்கலைக்கழகத்தின் / உயர் கல்வி நிறுவகத்தின் பதிவாளர் உறுதிப்படுத்தல் வேண்டும்.

7. பெயர்களை பரிந்துரை செய்யும் நடவடிக்கை சரியான முறையில் மேற்கொள்ளப்பட்டதனை உறுதிப்படுத்துவதற்காக அனைத்து திணைக்களங்களின் / பிரிவுகளின் தலைவர்கள் ஊழியர்களின் கையொப்பத்தை உறுதிப்படுத்தும் அலுவலை உரிய முறையில் கவனம் செலுத்தி மேற்கொள்ளுதல் வேண்டும்.

8. படிவங்களை சரியான முறையில் பூரணப்படுத்துவதற்காக பங்களிப்பாளர்களுக்கு பெயர்களைப் பரிந்துரை செய்தல் படிவத்துடன் அறிவுறுத்தல் பத்திரமொன்றும் வழங்கப்பட்டுள்ளது.

9. பெயர்களைப் பரிந்துரை செய்யும் படிவத்தை www.ugc.ac.lk/policy/Pension Circular Letters/ Pension Circular Letter No. 13 இணையத்தளத்தில் பிரவேசித்து பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும்.

**இந்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் 2017 ஏப்ரல் மாதம் 01 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்படும்.**

**ஒப்பம் : பேராசிரியர் பீ.எஸ்.எம்.குணரத்ன**

உப தலைவர்

**பிரதிகள்:-**

1. செயலாளர், உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு.
2. தலைவர் அலுவலகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
3. உப தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
4. உறுப்பினர்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
5. செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
6. பீடாதிபதிகள்.
7. பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள்.
8. கணக்காளர், பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழு.
9. பல்கலைக்கழகங்களின் நிதிப் பொறுப்பாளர்கள் (Bursars).
10. நூலகர்கள், சிரேஷ்ட உதவி நூலகர்கள், உதவி நூலகர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள்.
11. பிரதிப் பதிவாளர்கள் / சிரேஷ்ட உதவிப் பதிவாளர்கள் / உதவிப் பதிவாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் / வளாகங்கள்.
12. பிரதி நிதிப் பொறுப்பாளரகள் / சிரேஷ்ட உதவி நிதிப் பொறுப்பாளர்கள் / உதவிநிதிப் பொறுப்பாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் / வளாகங்கள்
13. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
14. பல்கலைக்கழகங்களின் அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகர்கள்
15. உயர் கல்வி நிறுவகங்களின் சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள் / உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள்.
16. தொழிற்சங்களின் செயலாளர்கள்.
17. கணக்காய்வாளர் தலைமை அதிபதி.